

# பனிமயம்

ஆகஸ்டு 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-







# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

திருத்தலப் பேராலயத்திலிருந்து தூய பனிமயத்தாயின் பெருவிழா வாழ்த்துகளை உங்களுக்கு வழங்கி மகிழ்கிறேன். இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும்போது, அன்னையின் பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி, பெருவிழா நாள்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். மகிழ்ச்சியும், அருளாசியும் நிறைந்த இந்த நாள்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

இரண்டு ஆண்டு பெருந்தொற்றின் இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டுதான் நம் அன்னையின் பெருவிழா வழமையான சிறப்புடன் நடைபெறப்போகிறது. அதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். இந்த ஆண்டு அன்னையின் பெருவிழா எப்படி நடக்குமோ என்ற ஆதங்கத்தோடு இருந்தவர்களையெல்லாம் அன்னையின் பரிந்துரை ஆற்றுப்படுத்தியது. **"மனிதரால் இயலாதவற்றைக் கடவுளால் செய்ய இயலும்"** (லூக் 18:27) என்று மொழிந்த ஆண்டவர் இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டே நாம் இயங்கி வருகிறோம். நம் பேராலயத்திலும், அன்பியங்களிலும், தன்னார்வக் குடும்பங்களிலும் நடைபெற்ற 30 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டுகள் கடவுளின் இரக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

நம் இறைவன் வியத்தகு செயல்களைச் செய்பவர். **"ஆம், இறந்தவர்களை வாழ்விப்பவரும் இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள்"** (உரோ 4:17) என்று உரோமையர் திருமடல் போற்றிப் பாராட்டும் நம் கடவுளின்மீது நம் நம்பிக்கையை வைத்து செயல்படுவோம்.

அன்னையின் பெருவிழா நாள்கள் நமக்கு விண்ணக, மண்ணக ஆசீர்வாதங்களின் அருள்காலமாக அமையட்டும்.

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 12

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**சிறு வணிகங்களுக்காக...**

சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு இடையே தொடர்ந்து செயல்படுவதற்கும் தங்கள் சமூகங்களுக்குத் தொண்டாற்றவும் வழிகளைக் காண நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. நற்கருணை அன்னை ....4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ....6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னைப் புனிதர்கள் அருளாளர் பவுலின் ஜெரிகாட் ....8
அருள்பணி. குமார்ராஜா

4. வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் ....10
கலாபன் வாஸ்

5. பனிமய அன்னையின் முதல் தேர் ....12
தி. சொர்ணராஜன் விக்டோரியா

6. நம் திருச்சபை, நமது பெருமை....16
"க்றிஸ் மிலியன்"

7. விவிலியப் போட்டி ....18

8. பனிமய சாட்சியங்கள் ....20

9. பனிமயப் பகிர்வு ....22

மரியன்னை மலர்கள் : 1

# நற்கருணை அன்னை!



மரியன்னையைப் பல்வேறு பெயர்களால் அழைத்து மகிழ்கிறது கத்தோலிக்கத் திருஅவை. ஆனால், அண்மைக் காலத்தில் "நற்கருணை அன்னை" (Our Lady of the Blessed Sacrament) என்ற பெயரும் அன்னைக்குச் சூட்டப்பட்டுள்ளது. நற்கருணை பக்தி என்பதுவும், மரியன்னை பக்தி என்பதுவும் இருவேறு தளங்களில் இயங்கியதை ஒரே புள்ளியில் இணைக்கும் புதிய பார்வையாக நற்கருணை அன்னை பக்தி உருவாகியுள்ளது.

"நற்கருணையின் திருத்தூதர்" என்று திருத்தந்தை 2ஆம் ஜான் பவுலால் அழைக்கப்பட்டவர் புனித பீட்டர் ஜூலியன் ஏமார் (St. Peter Julian Eymard). இவர்தான் "நற்கருணை அன்னை" என்னும் சொல்லாடலை அறிமுகப்படுத்தி அதைப் பிரபலப் படுத்தியவர். நாம் அனைவரும் நன்கு அறிந்த "நற்கருணையே கிறித்தவ வாழ்வின் ஊற்றும் மையமும்" என்னும் புகழ்பெற்ற வரிகளுக்குச் சொந்தக்காரரும் இந்தப் பிரஞ்சு அருள்பணியாளரே.

குழந்தைப் பருவத்திலிருந்தே மரியன்னை பக்தியோடு வளர்ந்தவர் ஏமார். புதுநன்மை வாங்குவதற்கு ஆயத்தமாக லாவுஸ் மரியன்னைத் திருத்தலத்துக்குக் கால்நடையாகவே திருப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். அவருக்கு 5 வயதிருக்கும்போது, ஒருநாள் காணாமல் போய்விட்டாராம். அவர் தாயும், அக்காவும் ஊர் முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியாக, பங்குக் கோவிலுக்குச் சென்று பார்த்தார்கள். அங்கே சிறுவன் ஏமார் நற்கருணைப் பேழையின் அருகே ஏறி, காதைப் பேழையின் அருகே வைத்து ஏதோ செய்துகொண்டிருந்திருக்கிறார். என்ன என்று கேட்டபோது, "இப்போதுதான் இயேசு பேசுவதை என்னால் கேட்க முடிகிறது" என்றாராம். சிறு வயதிலேயே அவரிடம் ஊறியிருந்த நற்கருணைப் பக்திக்கு இது ஒரு சான்று.

இளமைப் பருவத்திலிருந்தே பிரான்ஸ் நாட்டின் அனைத்து மரியன்னைத் திருத்தலங்களுக்கும் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் புனித ஏமார். குறிப்பாக,

சலேத் திருத்தலம் அவருக்கு மிகவும் பிடித்த ஒரு திருத்தலம். வளர வளர, மரியன்னை பக்தியையும், நற்கருணைப் பக்தியையும் இணைத்துக்கொண்டார்.

குருமடத்தில் சேரவிரும்பியபோது, அவர் தேர்ந்தெடுத்தது அமலவைத் தியாகிகள் (Oblates of Mary Immaculate) என்னும் துறவற சபை. மாதா பக்தியின் காரணமாகத்தான் அச்சபையில் சேரவிரும்பினார். ஆனால், கடும் நோயின் காரணமாகத் திரும்பி வந்துவிட்டார். பின்னர், மறைமாவட்டக் குருமடத்தில் சேர்ந்து 1834ஆம் ஆண்டில் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். உள்ளுக்குள் குடிகொண்டிருந்த மரியன்னை பக்தியின் காரணமாக 1839ஆம் ஆண்டு "மரியன்னை குருக்கள்" (Marist Fathers) சபையில் சேர்ந்தார். மரியன்னையின் குருக்கள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் மரியன்னையின் பக்தியைப் பரப்பத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். "மரியாவைப் போல சிந்திப்பது, மரியாவைப் போல வாழ்வது" என்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது.

மரியன்னை சபையில் சேர்ந்த ஏமார் மகிழ்வுடன் இவ்வாழ்வைத் தொடர்ந்தார். 1844ஆம் ஆண்டு அச்சபையின் மாநில அதிபராகவும் உயர்ந்தார். அக்காலத்தில் பிரான்ஸ் நாட்டில் பல இடங்களிலும் பரவி வந்த நற்கருணை பக்தியையும், நற்கருணை ஆராதனை வடிவங்களையும் கண்ட ஏமார், தமது சபையிலும் நற்கருணை ஆராதனையை அறிமுகப்படுத்தினார். மரியன்னை பக்தியையும், நற்கருணை பக்தியையும், குறிப்பாக 40 மணி நேர தொடர் ஆராதனையைப் பெரிதும் பரப்பினார். சபையின் மாநில அதிபர் பொறுப்பிலும் இருந்தார். ஆனால், அவரது சபையினரே அவருக்கு அதிக ஆதரவு அளிக்கவில்லை. ஏமார் சபையின் குறிக்கோளைத் தாண்டிச் செல்வதாக அவர்கள் நினைத்தனர்.

நற்கருணை ஆராதனைக்கு அதிக அழுத்தம் கொடுக்க இயலவில்லை என்பதால், அதனை வலியுறுத்தும் புதிய சபை ஒன்றை அவரே நிறுவினார். அதுதான் நற்கருணை சபை. 1856ஆம் ஆண்டு மே 13 அன்று "நற்கருணை சபை" (Congregation of the Blessed Sacrament) உருவானது. இச்சபையின் முதன்மை நோக்கமே நற்கருணைப் பக்தியை, நற்கருணை ஆராதனையைப் பரப்புவதே. அவர் சபையில் சேர்ந்த துறவியர் 24 மணி நேரமும் நற்கருணை ஆண்டவர் முன் இருந்து செபித்தனர். இவ்வாறு, நற்கருணை பக்திக்கு ஊக்கமூட்டினார் ஏமார்.

பீட்டர் ஜூலியன் ஏமாரின் மரியன்னை பக்தி இயேசுவை மையப்படுத்தியதாகவே இருந்தது. "அவரது அன்னைக்கு மதிப்பு கொடுக்காமல் இயேசுவை எப்படி அன்பு செய்யமுடியும்?" என்று கேட்டார் அவர். இயேசுவின் தாயை வணங்குவது ஒவ்வொரு கிறித்தவரின் கடமை என்பது அவரது கருத்து. பீட்டர் ஜூலியனின் வாழ்வு முழுவதும் அவர் மாதாவைச் சார்ந்தே வாழ்ந்தார். எப்போதெல்லாம் நெருக்கடிகள் அவரை எதிர்கொண்டனவோ, அப்போதெல்லாம் மரியன்னையிடம்தான் அவர் சரணடைந்தார்.

அவரது மரியன்னை பக்திதான் நற்கருணை பக்தியாக பரிமாணம் எடுத்தது. "மரியன்னைதான் என்னை நற்கருணை நாதரிடம் அழைத்துச் சென்றார்" என்று எழுதினார் ஜூலியன் ஏமார். நற்கருணை பக்தியோடு மரியன்னை பக்தியையும் இணைத்துக்கொண்டதுதான் இப்புனிதரின் சிறப்பு.

இவரைப் போலவே நாமும் நம் வாழ்வில் நற்கருணை பக்தியையும், மரியன்னை பக்தியையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்வோம். நற்கருணை ஆண்டவரைத் தம் திருவயிற்றில் தாங்கிய அன்னை மரியா நம்மையும் நற்கருணைச் சாட்சிகளாக மாற்றுவாராக!

**அருள் மரி வேந்தன்**



# 15 பனிமய அன்னை பேராலய

## மலரும் நினைவுகள்...

சிந்தனைப் பட்டறையில் செதுக்கிய எண்ணங்கள் செயல்வடிவம் பெறும்போது சிறப்பாக அமைந்துவிடுவது இயல்பு. அருள்தந்தை லாம்பர்ட் அடிகளார் எதிர்காலத்தை மனதில் இருத்தி நிகழ்காலத்தில் திட்டமிடுபவர். அவர் காலத்தில் தொடங்கி வைத்த காணிக்கை பவனி இப்போது நகரின் இருபதுக்கும் அதிகமான பங்குகளில் இருந்து மக்கள் திரளாகப் பங்கேற்கும் ஒரு ஆடம்பரமான பெரும் பவனியாக வளர்ந்துவிட்டது. மாதாவை மனதில் நினைத்து ஏழைகளுக்கு வேண்டிய உடு புடவைகள் திருப்பலியின் போது குருக்கள் அணியும் ஆயத்தங்கள் என பலவகையான காணிக்கைகளை ஆலயத்தில் அர்ப்பணிக்கும் காட்சி காணத்தக்கது.

காலச் சுழற்சியில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. நவீன உபகரணங்கள் என முன்பு கருதப்பட்ட எத்தனையோ பொருட்களும் முறைகளும், கணிணியும் கைப்பேசியும் வந்தபோது காணாமல் போய்விட்டன. உலகமே சுருங்கி கைக்குள் அடங்கி விடுகிறது இன்று. அதுபோலவே காணிக்கை ஊர்வலம் பழைய பஜனை கோஷ்டிகளை செயலிழக்கச் செய்துவிட்டதெனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மறைப்பணித் தளங்களிலும் (பங்கு) மேய்ப்புப் பணியாளரான அருள் தந்தையர் எடுக்கும் சில முற்போக்கு நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கென்றே ஒரு சில குழுக்களோ கூட்டமோ இருப்பதுண்டு. ஆனால் அருள்தந்தை லாம்பர்ட் அடிகளாரின் செயலாற்றலால் ஆலயத்தின் பசிலிக்கா உயர்வுநிலையும், தபால்தலைகள் வெளியீடும் மிகுந்த பாராட்டைப் பெற்றது போலவே தேர்த்திருவிழாவும் மிக ஆடம்பரமாக யாதொரு எதிர்ப்பும் தடங்கலும் இல்லாமல் ஏகோபித்த ஆதரவோடு நடந்து நிறைவேறியது.

ஆற்றல்மிக்க செயல்வீரர்கள் ஒருபோதும் செயலற்றுக் கிடப்பதில்லை. திருவிழா கோலாகலங்களெல்லாம் அமர்ந்து அமைதி தழுவியபோது, அடிகளாரின் பார்வை அருள்தந்தை ஜோப் டி ரோஸ் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தஸ்நேவிஸ் மாதா பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தின்மேல் விழுந்தது. போதிய இட வசதியில்லாமல் பள்ளிக்கூடமும், மாணவியர் தங்கும் விடுதியும் கன்னியர் மடமும் எல்லாம் ஒரே கட்டிடத்துக்குள் முடங்கிச் செயல்படுவதைப் பார்த்து அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இடர்ப்பாடுகளை எவ்வாறு நீக்கலாம் என ஆலோசித்தார். பங்குப் பணித்தள எல்லைக்குள் ஏதாவது உபயோகமற்ற நிலையில் இருக்கும் விசாலமான இடங்களைப் பற்றிய ஒரு மேல்நோட்டத் தேடலில் தேவைக்குத் தகுந்ததாக ஓரிடத்தைக் கைநீட்டிக் காட்டியது.

கெழுத்துக்குடி என்று இப்போது அழைக்கப்படும் கீழ தூத்துக்குடி முன்பொரு காலத்தில் கட்டுமரங்களிலும் வள்ளங்களிலும் கடல் தொழில் செய்வோரின் குடியிருப்பாக இருந்தது. அவர்களுக்கெனக் கட்டப் பட்டதாகக் கருதப்படும் புனித கித்தேரியம்மாள் ஆலயமும் அதற்கு எதிரே 1930களில் கட்டப்பட்ட அந்தோனியார் ஆலயமும், ஒரு நல்ல தண்ணீர் கிணறும் இருந்த இடம் அடிகளாரின் கண்களில் பட்டது. அவ்வாலயங்களைச் சுற்றி சுற்றுச் சுவரும் எழுப்பப்பட்டிருந்ததைக் கண்டு அந்த இடம் தஸ்நேவிஸ் மாதா பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு ஏற்றதாகக் கருதினார்.




சுறுசுறுப்பாகத் தனது வேலைகளை ஆரம்பித்தார். பரோக் பாணியில் கட்டப்பட்டிருந்த பழைய கித்தேரியம்மாள் ஆலயம் இடிக்கப்பட்டபோது எழாத எதிர்ப்பு அந்தோனியார் ஆலயம் இடிக்கப்படத் தொடங்கும்போது சுற்றுவட்டார மக்கள் எதிர்த்தனர். அந்தோனியார் சிற்றாலயத்துக்கான ஒரு சிறு இடத்தை ஒதுக்கிவிட்டு மற்ற இடம் முழுவதும் இரண்டு தளங்கள் (கீழ்த்தளம் & மேல்தளம் = மாடி) கொண்ட பள்ளிக்கூடக் கட்டிடத்தைக் கட்டி முடித்து கன்னியர்களிடம் ஒப்படைத்தார். இன்று தஸ்நேவிஸ் மாதா பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கூடம் நல்ல முறையிலே அதில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கென்று தனி விளையாட்டு மைதானம் இல்லாமல், சேசு சபையாரின் சவேரியானாவை உபயோகிக்கிறார்கள்.

1977 தேர்த்திருவிழாவில் மிஞ்சிய பணத்தில் அருள்திரு ஜோப் டி ரோஸ் அடிகளார் மிலிக்கன் ஆபீஸ், மேல்பிரஸ் ஆகியவற்றையும் அதோடு சேர்ந்த நிலத்தையும் வாங்க முயற்சித்தபோது, துண்டுபட்ட தொகைக்காக மறைமாவட்ட உதவியை நாடியபோது, மறைமாவட்டமே தங்களுக்கென அந்த இடத்தை வாங்கி திருமண மண்டபமும் கடைகளும் கட்டிவிட்டன. அவ்வாறு நடக்காமல் அருள்திரு ஜோப் டி ரோஸ் கேட்ட உதவி கிடைத்திருந்தால், பள்ளிக்கூடத்தில் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அதுமட்டுமா... உயர்திரு M.P. கோமஸ் வீட்டார் தங்கள் புராதன வீட்டை மாதா கோவிலுக்கு நன்கொடையாக கொடுத்து அதற்கான கல்வெட்டும் பதிக்கப்பட்டிருந்தது. அதில் அருட்சகோதரி ரேமண்டு பங்கில் உள்ள மழலையருக்காக ஒரு பயிற்சியகத்தை நடத்தி வந்தார்கள். என்ன நடந்ததோ தெரியாது... அந்த கட்டிடம் இடிக்கப் பட்டு அதை தனது உடமையாக்கி ஒரு அலுவலகக் கட்டிடத்தைக் கட்டிய மறைமாவட்டம், மின்சார இலாகாவுக்கு வாடகைக்கு விட்டிருந்தது. நன்கொடையாகக் கொடுக்கப்பட்டதை பதிவு செய்திருந்த கல்லும் பிடுங்கி எறியப்பட்டுவிட்டது.

அருள்திரு. லாம்பர்ட் அடிகளார் 1984ஆம் ஆண்டு மாற்றலாகிப் போகாமல் நீடித்திருந்தால் தஸ்நேவிஸ் மாதா பள்ளிக்கு விளையாட்டு மைதானம் போன்ற அந்தக் குறையைக்கூட தீர்த்திருப்பார் என மக்கள் பலர் பேசியதை கேட்டவர்கள் உண்டு.



தொடரும்

**செல்வராஜ் மிராந்தா**

# அருளாளர் பவுலின் ஜெரிகாட்

(1799-1862)

## மறைத்தூதுப் பணி சபையை நிறுவிய செபமாலை வீராங்கனை!



திருத்தந்தையின் மறைத்தூதுப் பணி சபையைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இச்சபைதான் உலகம் முழுவதும் நற்செய்தி அறிவிக்கும் பணிக்கான அருளாதாரம் மற்றும் பொருளாதாரத்தைத் திரட்டிப் பகிர்ந்தளிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் திங்களில் நற்செய்தி அறிவிப்பு நாள் ஒன்றைக் கொண்டாடி பணம் தண்டி அனுப்புகிறோமல்லவா? அந்தக் காணிக்கை மற்றும் மன்றாட்டுகள் அனைத்தையும் இந்தச் சபைதான் ஒருங்கிணைக்கிறது. இந்தச் சபையின் நிறுவனர்தான் பவுலின் மரிய ஜெரிகாட்.

பிரான்ஸ் நாட்டின் லையன் நகரில் அன்றன் ஜெரிகாட், ஜீன் தம்பதியரின் ஏழு குழந்தைகளில் கடைக்குட்டியாக பிறந்தவர் பவுலின். தனது 15ஆவது வயதில் ஒரு மறையுரையின் தாக்கத்தால், லையன் நகரின் கேளிக்கையான வாழ்வில் ஆர்வம் இழந்து, எளிமையான வாழ்வு வாழ உறுதி பூண்டார். 17ஆவது வயதில் தாயை இழந்தார். அதன்பின் தீவிர செப வாழ்வில் ஈடுபட்டார். வாழ்நாள் முழுவதும் கன்னியாய் இருப்பதென்று தீர்மானித்தார்.

மறைபரப்புப் பணிக்குத் தன்னாலான உதவியைச் செய்யவேண்டுமென்று விரும்பிய பவுலின் அக்கருத்துக்காக செபிக்க பட்டுத் தொழிற்சாலையில் வேலை செய்த பெண்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார். வாரமொருமுறை அனைவரும் இணைந்து செபிப்பதோடு, தங்களின் ஊதியத்திலிருந்து ஒரு சிறிய தொகையைக் காணிக்கையாகத் தரவும் ஊக்குவித்தார். இந்தச் செயல் பரவி மற்றவர்களும் வாராந்திர, அல்லது மாதாந்திரக் காணிக்கை வழங்கத் தொடங்கினர். இப்படி சிறு துளியாகத் தொடங்கியதுதான் 1822ல் உருவான "மறைத்தூதுப் பணி" (Propagation of Faith) சபை. நூறு ஆண்டுகளுக்குப் பின் 1922ல் திருத்தந்தை 11ஆம் பயஸ் இச்சபையை "திருத்தந்தையின்" (Pontifical) சபை என்று அறிவித்தார்.

பவுலின் புனித தொமினிக்கன் மூன்றாம் சபையின் உறுப்பினராக இருந்ததால், அவரது ஆன்மீக குருவாகப் பல ஆண்டுகள் உதவியவர் ஆர்ஸ் நகரப் பங்குத் தந்தை புனித ஜான் மரிய வியான்னி. அத்துடன், புனித பிலோமினாமீதும் பெரும் பக்தி கொண்டிருந்தார் பவுலின்.

புனித பிலோமினா நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு மறைசாட்சி. கிபி 291ஆம் ஆண்டு கிரீசில் பிறந்து 304ஆம் ஆண்டில் தமது 13 வயதில் உரோமையில் மறைசாட்சியாய் இறந்தவர். அவரைப் பற்றி வெளியுலகம் அறியாமலே இருந்தது. 1802ஆம் ஆண்டு இத்தாலியின் பிரிசில்லா நகரின் சுரங்கக் கல்லறைச் சுரங்கங்களிலிருந்து அவரது உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. கல்லறையை மூடியிருந்த மேற்புறத்தில் "அமைதி உண்டாகுக பிலோமினா" என்று எழுதப்பட்டிருந்தது. அதுதான் அப்புனிதையின் பெயர் என்று ஊகம் செய்தார்கள்.

1805ஆம் ஆண்டு அவரது எலும்புகளை முஞ்ஞானோ (Mugnano del Cardinale) என்னும் இடத்திற்கு மாற்றினார்கள். அங்கே மக்கள் திரளாகக் கூடி மன்றாடினார்கள். ஏராளமான புதுமைகள் நடைபெற்றன. பவுலினும் முஞ்ஞானோ திருத்தலம் சென்று பிலோமினாவிடம் மன்றாட விரும்பினார். எனவே, அவளைக் கூட்டிக்கொண்டு உரோமை சென்றார்கள். உரோமையில் திருத்தந்தையைச் சந்தித்த பவுலின் திருத்தந்தையிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். தாம் முஞ்ஞானோ சென்று பிலோமினாவின் பரிந்துரையால் நலம் பெற்றுத் திரும்பி வந்தால், பிலோமினாவைப் புனிதை என்று அறிவிக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. உடல் நலிவடைந்திருந்தாலும், தொடர்ந்து பயணம் செய்து, பிலோமினாவிடம் மன்றாடி நலம் பெற்று உரோமை திரும்பினார்.

1837ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் கிரகோரி பிலோமினாவைப் புனித நிலைக்கு உயர்த்தினார். இன்று புனித பிலோமினா பவுலின் தோற்றுவித்த வாழும் செபமாலை இயக்கத்தின் பாதுகாவலியாகவும் உள்ளார்.

1826ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் மரியன்னையின் அமல உற்பவத் திருநாள் அன்று "வாழும் செபமாலை இயக்கத்தை" தொடங்கினார் பவுலின். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தினமும் செபமாலையின் 10 மணிகளை ஈடுபாட்டுடன் செபிக்கும் பணி வழங்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டில் தோன்றிய இந்த இயக்கம், இதர நாடுகளுக்கும் பரவி இன்று உலகளாவிய இயக்கமாக மாறியுள்ளது. 1832ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் கிரகோரி இவ்வியக்கத்திற்குத் தமது ஒப்புதலை வழங்கினார்.

தற்பொழுது இந்த இயக்கத்தை அமெரிக்காவிலுள்ள பேற்றி மெல்வின் என்னும் அம்மையார் வழிநடத்தி வருகிறார். இடையில் சற்று தொய்வடைந்திருந்த இந்த இயக்கத்தை இவர் 1986ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் முதல் மீண்டும் வலிமைப்படுத்தி வருகிறார். வாழும் செபமாலை இயக்கத்தின் நோக்கம் செபமாலை செபிப்பதன் வழியாக கத்தோலிக்க இறைநம்பிக்கையைப் பாது காப்பதும், கத்தோலிக்கத் திருஅவைக்காகவும், தேவையில் உள்ளோருக்காகவும் மன்றாடுவதும்.

பவுலின் ஜெரிகாட் 63ஆண்டுகள் வாழ்ந்தார். அதன் பெரும் பகுதியை நோயாளராகவே கழித்தார். மறைப்போதகப் பணிக்காக பணம் தண்டி திருத்தந்தைக்கு அனுப்பி வைக்கும் பணியைத் தொடர்ந்து செய்தார். இருப்பினும், அவரது சொந்த வாழ்வில் அவர் நம்பியவர்களே அவரை ஏமாற்றி, அவரது சொத்துகளையெல்லாம் எடுத்துக்கொண்டனர். 1862ஆம் ஆண்டு ஓர் ஏழையாகவே இறந்தார். கடந்த 22.05.2022 அன்று அருளாளராக உயர்த்தப்பட்டார்.

மரியன்னைமீதும், செபமாலைமீதும், நற்செய்தி அறிவிப்பின்மீதும் அவர் கொண்டிருந்த பேரார்வம் நமக்கு உந்துகோலாக அமையட்டும்!



அருள்பணி. குமார்ராஜா

### வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் - 2

# ஏழைகளின் தந்தை...



ஒரு குருவானவர் **என்றால்** இப்படித்தான் எளிமை**யாக** - ஆடம்பரமின்றி - மக்கள் **பணி**யில் ஈடுபாடும் ஆர்வமும் உள்**ளவராகத்** திகழ வேண்டும் என்பதற்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

அவருடைய பெயரில்**தான்** **'அலங்காரம்'!** ... ஆனால், எப்போதும் எளிய கதராடைதான்... முகத்தில் புன்னகை... கண்களில் ஒளி... உதவும் நேசக்கரங்கள்.. ஓயாத நடை... பழகுவதற்கு இனிய எளிய குழந்தை மனம் கொண்டவர்... **அருளடியார் பவுல் அலங்காரம் சுவாமிகள்.**

**'ஏழைகளின் தந்தை'** - **என்று** அனைவராலும் பாரா**ட்டப்** பட்டவர்.

"கோயில்களைக் கட்ட**வும்,** கொடி மரங்களை நாட்ட**வும்,** சலவைக் கற்பீடங்**கள்** அமைக்கவும், வான்நோக்**கிக்** கோபுரங்கள் எழுப்பவு**ம்,** மக்கள் சேர்ந்து ஆயிர**ம்,** பதினாயிரம், இலட்சம் என்று கொடுக்கின்றனர். வறுமையால் வாடும் - பரிசுத்த ஆவியார் வதியும் இதயக் கோயில்களைச் செம்மையாக வாழச் செய்ய முன்வருவார் யாரும் இல்லையே என ஏங்கினேன். ஏழைகளை வாழ வைப்பது இறை **இயேசுவுக்கு** ஆற்றும் சிறந்த பணி, **பிரியமான** பணி. பொதுவாக, நம் **மக்கள்** **இன்**றும் இதைக் கண்டு **உணரவில்**லையே என்று வருந்தினேன்" - என்று **'குருத்துவப் பணியில் என் அனுபவங்கள்'** - என்ற **அ**வரது வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிடுகின்றார்.

இதுதான் அவருடைய இலட்சியம் - தாகம். இந்தப் பின்னணியிலேயே **அ**வருடைய பணி வாழ்வுக் காலம் முழுவதும் - மணப்பாடு தூய ஆவியார் பங்குத் **தந்**தையாக முதன் முதலில் **பொ**றுப்பேற்ற காலத்திலி**ருந்து**, தளர் நடைபோடும் **காலம்** வரை அவரின் உந்து **சக்தி**யாகவும் - எரியும் **தண**லாகவும் திகழ்ந்தது.

சிறு வயதிலேயே தன்னுடைய பெற்றோர், உடன் பிறப்புகள் தாத்தா, பாட்டி, தாய் மாமன் ஆகிய ஏழுபேரின் மரணத்தையும் ஒரே நாளில் சந்தித்தவர்!... ஏழுபேரும் காலராவிற்கு பலி யாயினர்.

ஏழை எளிய குடும்பத்திலிருந்து வந்தவர் என்பதால், வறுமையிலும் ஏழ்மையிலும் வாழும் மக்கள்மீது எப்போதும் அன்பும் பாசமும் கொண்டிருந்தார்.

அவருடைய பணி வாழ்வுக் காலத்தில் எத்தனையோ முறை கொலை வெறித் தாக்குதலை எதிர்கொள்ள நேரிட்டது! **இறைவாக்கினர் ஆமோஸ்** போன்று, ஆடம்பரத் திருவிழாக்களுக்கு எப்போதுமே எதிர்ப்புக் குரல் கொடுப்பார்!

மக்கள் ஆன்மா மட்டும் உடையவர்கள் அல்லர்... உடலும் உடையவர்கள். இதை உணர்ந்து, வறுமைப்பட்டவர்களை வாழ்விக்க, வசதியுள்ளவர்களிடமிருந்து வாங்கி, இயன்ற அளவு உதவிகளை எளிய மக்களுக்குச் செய்வதில் துடிப்புடனிருந்தார்.

இராட்டைக் கழகம் - மீனவர் சங்கம் - நைலான் வலைகளை அறிமுகம் செய்தது - ஆதரவற்ற குடும்பங்களுக்கு உதவித் திட்டம்... இப்படிப் பலவகையிலும் சமூக மேம்பாட்டில் அக்கறையுடன் செயல்பட்டார்.

வாகனங்களைப் பயன்படுத்துவது அரிது... எப்போதும் நடைதான்!

மத நல்லிணக்கக் குழுவினருடன் இணைந்து, மாவட்ட ஆட்சியரிடம் எவ்வளவோ பிரச்சனைகளைச் சுமூகமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்.

ஏழைக் குமர்கள் கரையேற, வரதட்சணை ஒரு தீய சக்தியாக விளங்குவதால், அதனை எதிர்த்து, அச்சுப் பிசுரங்களை வெளியிடும் வகையில், அருட் தந்தையுடன் இணைந்து செயல்படும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

'SAVE A FAMILY' - என்ற குடும்பக் காப்புத் திட்டத்தின் மூலம், தந்தையவர்கள் பெற்றுத் தந்த நிதியுதவியை சிப்பிகுளம் கிராமத்திற்கும் வழங்கியிருக்கிறோம்... இதன் வழியாக ஒரே நேரத்தில் பல கைம்பெண்களுக்கு உதவ முடிந்தது. தந்தையவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும், அந்தக் கிராமத்தில் நிதியுதவி பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல், அவரது பாக்கெட்டில் இருக்கும்... உதவி கிடைத்ததா என்பதைச் சரிபார்த்துக் கொள்வதற்காக.

**'தஸ்நேவிஸ் மாதா அறக்கட்டளை'**யை உருவாக்கி, ஏழைகளின் துயர் துடைத்தவர்.

இறுதிவரை ஓய்வின்றித் தன் இலட்சியத்திற்காக நேர்மையாக உழைத்த உத்தமமான அருட்பணியாளர்.

சிறந்த எழுத்தாளரான அடிகளார், தமது தெளிவான கருத்துகளை, எவ்விதத் தயக்கமுமின்றி, **'ஞானதூதன்'** இதழில் பல கட்டுரைகளாக எழுதி வந்தார். அநேகத் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அடிகளாரின் நினைவைப் போற்றும் வகையில், தூத்துக்குடியில் அலங்காரத்தட்டு செல்லும் சாலையில், லூர்தம்மாள்புரத்தில் ஆளுயரச் சிலை செய்து வைத்திருக்கிறார்கள் பொதுமக்கள். தூத்துக்குடி மறைமாவட்டத்தில், வேறு எந்தக் குருவானவருக்கும் ஒரு பொது இடத்தில் சிலை இருப்பதாகத் தெரியவில்லை!

அருட்பணி அலங்காரம் அடிகளாரின் அறப்பணிகள், நேர்மையான குருத்துவ வாழ்க்கையைப் போற்றும் வகையில் தூத்துக்குடி மறைமாவட்டத்தின் பங்களிப்பு என்ன? - என்று பொதுநிலையினர் ஆதங்கத்துடன் கேட்கின்றனர்.



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 22

# அன்னையின் முதற் தேர்

### இந்து பரதர்களின் தேர்

பரவர்கள் இந்துக்களாக இருந்தபோது, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள **உத்தரகோச மங்கை கோயிலு**க்கு முற்றிலும் கருங்கல்லால் ஆன தேரினைச் செய்து அளித்தார்கள். அவர்கள் அப்போதே தங்களது குல தெய்வத்திற்கு தேரிழுக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர்.

இந்த விபரங்கள் பரவ குல சாதித் தலைவர்களின் இல்லமான பாண்டியபதியில் பாதுகாக்கப்பட்டு வரும் கோப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தரகோச மங்கைக் கோவிலில் உள்ள கற்றேரின் மாதிரியே, பனிமய அன்னையின் பொற்றேர் வடிவம் எனக் கூறப்படுவதுண்டு.

மேலும் விஜய நகர பேரரசின் பூர்வீக தலைநகரமான **ஹம்பி** (Hampi, on the South Bank of Tungabhadra River in Karnataka) என்ற ஊரில் வித்தாலா கோவிலின் (Vitthala Temple) உள்புறம் கருட சந்நதி வடிவமைக்கப்பட்ட கல் தேரும் இது போலவே இருக்கும்.

### இந்து தேர்வட உரிமை

**'சந்திரகுலத்தவர்'** எனக் கூறப்படும் பரவ மக்கள் **மச்சேந்திரன்** என அழைக்கப்படும் **தேவந்திரனின்** மகளான **தெய்வானை**யை **முருகன்** மணந்ததால், முருகனை **மச்சான்சாமி** என அழைப்பர். **திருவாதவூரார் புராணம்** முருகனின் மனைவி தெய்வானையை **பரத்தி** எனப் பாடுகிறது.

திருச்செந்தூர் முருகனின் உறவு என்ற அடிப்படையில் பரவ மக்கள் தங்களுக்கு கிடைக்கும் முத்துக்களில் பத்தில் ஒரு பகுதியை திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கும், மேலும் அது போன்ற இன்னொரு அளவை ஆலய ஓதுவார்களுக்கும் காணிக்கையாக அளிப்பார்கள்.

அதனாலும், உறவு உரிமை என்ற அடிப்படையாலும், நெய்தனில குறுநில மன்னனான பரவ குலத் தலைவருக்கு, திருச்செந்தூர் முருகன் ஆலயக் கொடியேற்று விழாவின்போது, தேர்வடம் தொட்டுக் கொடுக்கும் கௌரவம் அளிக்கப்பட்டிருந்தது.


திருச்செந்தூர் முருகன் ஆலய விழாவில் பங்குகொள்ளும் பரவ குலத்தலைவர் நாழிப்படி முத்துமணிகளை காணிக்கையாக அர்ப்பணித்ததும், அவருக்கு ஆலய சார்பாக தேங்காய் பழங்களுடன் மூலத்தார் பஞ்சகச்சம் (சோமான்) மற்றும் அங்கவஸ்திரம் என்ற மேலாடையும் வழங்கப்படும், அவர் அதை அணிந்துதான் தேர்வடம் தொட்டுக் கொடுப்பது வழக்கம்.

'அந்த நாளெம் பரதர்ரத வடமுன் தொட்டே,
அளிக் காது செந்தூரா னெழம்பா னென்பர்'

என்று இப்பழமையை குறிப்பிடுகிறது எண்சீர் விருத்தம்.

பரவ குல மக்கள் கிறிஸ்தவத் திருமறையை தழுவிய பிறகும், 18-ஆம் நூற்றாண்டு வரை இப்பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். பின்னர், கிறிஸ்தவ குருக்களின் அறிவுரைப்படி செந்தூரானின் தேர்வடம் தொட்டுக் கொடுக்கும் பழக்கம் நிறுத்தப்பட்டது.

ஆவணி மூல உற்சவத்துவ சாரோகண தேர்வடம் தொட்டுக் கொடுப்பதைப் பற்றி வீரபாண்டியன்பட்டினத்து அடப்பனுக்கு முருகன் கோவில் **பூசாரி கே. இராமசுப்பையர்** எழுதிய நிருபமும், 375-ஆம் பசலி ஆண்டு பரவகுல சாதித் தலைவரின் கட்டளைபடி வீரபாண்டியன்பட்டினத்து அடப்பன், செந்தூர் முருகனின் தேர் வடம் தொட்டுக் கொடுக்க




மறுத்து எழுதிய **இராஜினாமா அறிக்கை**யும், பரவ குல தலைவர்களின் அரண்மனையான பாண்டியபதியில், அரண்மனைச் சாசனங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

**அன்னையின் முதல் தேர்**

பரிசுத்த பனிமய அன்னையின் அற்புத திருச்சுரூபத்தை, 1713–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அன்னையின் புதிய ஆலயத்தில் ஆடம்பரமாகவும் சாஸ்வதமாகவும் நிறுவியதின் நினைவாக, 1720–ஆம் ஆண்டில் பரவ குல சாதித் தலைவர் **தொன் கபிரியேல் ஆரோக்கிய தெக்குரூஸ் கோமஸ்** (1716–1736) அன்னைக்கு ஓர் அழகிய சிறு தேரினை உருவாக்கினார்.

இதுவே, பனிமய அன்னை தூத்துக்குடி வீதிகளில் வலம் வந்த **முதல் தேர்**!

இந்த அழகிய சிறு தேரை, பரவ மக்கள் முத்துச் சிலாபங்களில் செழிப்படைந்திருந்த ஆண்டுகளில் மட்டும் நகர் வலம் வரச்செய்து, அன்னையை மகிமைப்படுத்தி நன்றி தெரிவித்துள்ளனர்.

1779–ஆம் ஆண்டில்தான், பனிமய அன்னையின் இந்தத் தேர் கடைசியாக வலம் வந்திருக்கவேண்டும். காரணம், 1779–ஆம் ஆண்டிற்குப் பின் 20 ஆண்டுகளுக்கு மேலாக, முத்துக்குளித்துறை முழுவதும் சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த காலமாய் இருந்தது.

**சித்திரப் பொற்றேர்**

1720–ஆம் ஆண்டில் முதன் முதலில் வலம் வந்த தேரானது, செழிப்பான முத்துக்குளித்தல் காலங்களில் தொடர்ந்து தூத்துக்குடி வீதிகளில் ஆடம்பர பவனி வந்து, 1779–ஆம் ஆண்டுக்கு பிறகு சுமார் 25 ஆண்டுகள் நிறைந்த சோதனை கால இடைவெளியில் கவனிப்பாரற்று சேதமடைந்திருக்க வேண்டும்.

பனிமய அன்னையின் திருச்சுரூபம் தூத்துக்குடி நகரை வந்தடைந்த 250–வது ஆண்டு (1555–1805) நெருங்கி கொண்டிருந்தபடியால், தங்கத்தாய்க்கு தன்னிகரில்லா தங்கத்தேர் ஒன்று செய்ய பரவ குலமக்கள் விழைந்தனர்.

அன்னையின் அற்புதத் திருச்சுரூபம் தூத்துக்குடி திருமந்திர நகரை வந்தடைந்த 250–வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையிலும், ஆங்கிலேயரிடமிருந்து தம்மை உயிர் பிழைக்க வைத்த அன்னைக்கு தோத்திரமாகவும், முத்துச்சிலாபங்களில் தமக்குக் கிடைத்த அபரிதமான லாபத்தைக் கொண்டு, அன்றைய பரவ குல சாதித்தலைவர் **தொன் கபிரியேல் தெக் குரூஸ் வாஸ் கோமஸ்** (1779–1808) **'பரதர் மாதா'** என்னும் திவ்விய தஸ்நேவிஸ் பனிமய அன்னைக்கு ஓர் சித்திரத் தேரைச் செய்வித்தார். அந்தத் தேரின் வடத்தை முதலில் தொட்டுக் கொடுத்து, அன்னையின் தேரினை நகர்வலஞ் செய்ததால், அவர் **'தேர் மாறன்'** என அழைக்கப்பட்டார்:

1805-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாளான பனிமய அன்னையின் திருநாளன்று நகர்வலம் வரவேண்டிய தேர், சித்திர வேலைப்பாடுகள் சற்றே சுணங்கியதால், ஆறு மாதம் கழித்து 1806-ஆம் ஆண்டு பெப்ரவரி 2-ஆம் நாளன்று **மாதாவின் சுத்திகரித்த திருநாளில்** பவனி வந்தது.

எங்கும் காண்பதற்கரியதும், பொன்னுலகில் இருந்து இறங்கிய தேர் என இறும்பூது கொள்ளத்தக்கதுமான இச்சித்திரத் தேர், நகரின் தலைசிறந்த சிற்பி **நேவிஸ் பொன்சேக்கா** அவர்களால் 4000 பொன்வராகனில், அதாவது சுமார் ஒரு இலட்ச ரூபாய் செலவில் செய்யப்பட்டது.

இந்தச் சித்திர பொற்றேர் **'தங்கத்தேர்'** எனும் அதன் பெயர்க்கொப்ப எங்கணும் தங்கமே துலங்க மகோன்னதமான நுணுக்க வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டது. சித்திரச் சிற்பத் திறன் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள இந்தத் தேரில், சித்திர வேலைப்பாடுகள் மட்டுமல்லாமல் முழுச் சுரூபங்களாக யூத மன்னர்கள் பன்னிருவர், நற்செய்தியாளர்கள் நால்வர், சர்வேசுவரன் மேல் சிரசு பீடத்தில் பரமபிதா, மாடப்புறா ரூபத்தில் தூய ஆவி, கடல் மனுஷ மனுஷிகள் மற்றும் வானதூதர்கள் சிறப்புறக் காணப்படுகிறார்கள்.

**இன்றையத் தேர்**

சுமார் 75 அடி உயரத்தில் மிக உயரமாக அமைக்கப்பட்ட அன்னையின் தேர், பிற்காலத்தில் ஜெபமாலையின் 53 மணிகளை குறிக்கும் வகையில் **53 அடி** உயரத்திற்கு குறைக்கப்பட்டது. தங்கத்தேரின் மேல்பகுதியில் உள்ள விடி வெள்ளி போன்று ஐந்து முனைகளுடைய **பெரிய விண்மீன்**, இறைவனின் அன்னை கன்னிமாதா 'விடியற்காலை விண்மீன்' (Morning Star - Stella Maris) என்பதை உணர்த்துகின்றது.

அதற்குக் கீழே சதா சுழன்ற வண்ணம், 9 **பெரிய வெண்பொன் மீன்கள்** இருக்கின்றது. தேவமாதா விண்ணுக்கும் மண்ணுக்கும் மகாராணியாக மகுடம் சூட்டப்பட்டதை நினைவுறுத்த ஓர் அழகிய **பொன்முடி** அமைக்கப்பட்டுள்ளது.

அதன் கீழ் இவ்வுலகைப் படைத்த இறைவன் **பிதாவாகிய சர்வேசுவரன்**, முதியவர் தோற்றத்தில் ஓர் சிறு அழகிய பீடத்தில் காட்சியளிக்கிறார். சுற்றிலும் நான்கு பக்கத்திலும் இருபக்க உருவங் கொண்ட **நான்கு வானதூதர்கள்** பறந்த நிலையில் உள்ளனர்.

இறைத்தந்தையின் உருவத்திற்குக் கீழ் **தூய ஆவி**யானவர் வெண்புறா வடிவில் காட்சியமைக்கப்பட்டுள்ளார். அடுக்கடுக்காக ஒரு சிறிய தூண், நடுத்தரத் தூண், பெரிய தூண் வீதம் நான்கு பக்கமும் **பன்னிரு தூண்கள்** மிக நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்டு காணப்படுகின்றன.

தங்கத்தேரின் நடுப்பகுதியில் சித்திர வேலைப்பாடுகள் சிறப்புடன் செய்யப்பட்ட அழகிய பீடத்தில் **பனிமய அன்னை**யின் திருச்சுரூபம் காட்சியளிக்கின்றது. குழந்தை வடிவில் **இறைமகன் இயேசு** பனிமய அன்னையின் இடக்கரத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றார்.

அன்னையின் திருச்சுரூபம் தாங்கும் பீடத்தின் மேல் பகுதி வளைவின் முனைகளில் குழந்தை உருவில் இரு வானதூதர்கள் என நான்கு பக்கங்களிலும் **எட்டு வானதூதர்கள்** அமைந்துள்ளனர். மன்னர்க்கு மன்னராம் இயேசுவை இவ்வுலகிற்கு அளித்த அன்னை என்பதை நினைவுறுத்த பனிமய அன்னையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தாவீது அரசர் முதல் இயேசு பாலனைக் காணவந்த **மூன்றரசர்கள்** உட்பட **பன்னிருவேந்தர்கள்** சுற்றிலும் வைக்கப் பட்டுள்ளனர்.

அரசர்கள் நிற்கும் அகன்ற பீடப்பகுதியின் கீழ் நான்கு மேல் முனைகளிலும் **நான்கு கிளிகளின் தலைகள்** அழகாகச் செதுக்கப் பட்டுள்ளன.



அதன் கீழ்பக்கத்திற்கு **மூன்று** புனிதர்கள் என நான்கு **பக்கங்களில் பன்னிரு புனிதர்**களின் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. **இதில்** நற்செய்தியாளர்கள் **நால்வரும்,** புனிதர்கள் ச**வேரியார், இஞ்ஞாசியார், தோமையார்** ஆகியோரும் **உண்டு.**

இடுப்பிற்கு மேல்பாகம் **மனித** உருவமும் கீழ் பாகம் **மீன்** வடிவமுங்கொண்ட **கயல் கன்னியர்** இருவர், **கயல் காளையர் இருவர்** என நால்வர் நான்கு **திசை** நோக்கிக் கைகூப்பிய வண்**ணம்** வணங்கி நிற்கின்றனர்.

நான்கு பெரி**ய** சக்கரங்களும், நடுவில் **இரு** சிறு சக்கரங்களும் தாங்**கி** நிற்கும் பனிமய அன்னையி**ன்** இந்தத் தேரில் உள்ள ஒவ்வொரு பகுதியும் மிக அழகான நுட்பத்துடன் வெகு நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது.



பனிமய அன்னையின் திருச்சுருபத்தை அன்னையின் ஆலயத்திலிருந்து அழகிய பொற்றேருக்கு கொண்டு வருவதற்காக ஓர் அழகிய **முத்துப் பல்லக்கு** உள்ளது.

தங்கத் தேரை இழுக்கும் கயிற்றின் அகலம் அரை அடி, நீளம் ஐம்பது அடிகள். முன்னும் பின்னும் இக்கயிறுகளைக் கொண்டு மக்கள் அன்னையின் தேரை இழுத்துச் செல்வார்கள்.

**தங்கத்தேர்ப் பவனி**

